1989 நவம்பர் 1]

6. அறிவிப்பு.

சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1989 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/1989) பேரவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தம்து இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

5. (ii) சட்ட முன்வடிவுகள் (ஆய்வு)—தொடர்ச்சி.

(இ) சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன் வடிவின் மீது விவாதம் தேவையிருக்காது என்று கருதுகிறேன். காரணம் எதிர்க் கட்சித் தலைவருக்கும், முதலமைச்சரின் பாராளுமன்றச் செயலாளருக்கும், மற்றும் சட்டமன்ற உறுப் பினர்களுக்கும் அலவன்ஸ் அதிகப்படுத்துவது சம்பந்தமான சட்ட முன்வடிவு ஆகும் இது. எனவே, விவாதமின்றி இதனை ஏகமன தாக அனைவரும் சேர்ந்து நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை சபாநாயகர் அவர்கள், முதலமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர், எதிர்க் கட்சித் தலைவர் ஆகியவர்களுக்கெல்லாம் 200 ரூபாய் அதிகரிப்பு வழங்குவதற்காக இச்சட்டமுன்வடிவு இங்கே கொண்டு வரப்பட்

---

* 31—10—1989 ஆம் தேதியிட்ட **தமிழ்நாடு சிறப்பு அரசி தழில் வெளியிடப்பெற்றுள்ளது.**